FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

**தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017**

**Term Examination, November - 2017**

| தரம் :- 12 (2019) | நாடகமும் அரங்கியலும் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையை தெரித்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் வளழுதுக**

## பகுதி – I

1. ஆற்றுகைக் கலைவடிவமாக விளங்குவது
(1) சிற்பம் (2) ஓவியம் (3) கட்டம் (4) நாடகம் (5) சித்திரம்

2. தமிழ் பண்பாட்டில் கூத்துக்கள் ஆடப்படும் அரங்காக அமைந்தது.
(1) வட்டக்காரி
(2) படைச்சட்ட அரங்கு
(3) கோயில் உள்ளக அரங்கு
(4) கோயில் வெளி அரங்கு
(5) ஊர்த்தி அரங்கு

3. நாடக ஆசிரியரால் எழுதப்பட்ட நாடக பாடத்தை உயிரோட்டமான ஒரு கலையாக அரங்க வெளியில் மீளப் படைப்பவர்
(1) நாடக தயாரிப்பாளர் (2) நெறியாளர் (3) இசை அமைப்பாளர்
(4) காட்சிவிதானிப்பாளர் (5) ஒளி அமைப்பார்

4. உடல் அங்கஙகளின் மூலம் நடிப்பினை வெளிப்படுத்தும் அபிநயம்
(1) வாச்சீக அபிநயம் (2) ஆஹார்ய அபிநயம் (3) ஆங்கீக அபிநயம்
(4) சாத்வீக அபிநயம் (5) ஸ்தாயி பாவம்

5. நாடகம் என்பது உலக இயல்பை போலச்செய்தல் ஆகும் எனும் கருத்தை கூறியவர்
(1) பரதமுனிவர் (2) ரூசோ (3) அரிஸ்ரோட்டல்
(4) பேர்ணாடஷா (5) அலடைஸ்நிக்கொல்

6. கவிதையியல் என்னும் நூலின் ஆசிரியர்
(1) ஈஸ்கலஸ் (2) அரிஸ்ரோட்டல் (3) தெரன்ஸ்
(4) மெனாண்டர் (5) அரிஸ்ரோபன்ஸ்

7. கவிதையியல் என்னும் நூலின் காலப்பகுதி
(1) கி.மு 4ம் நூற்றாண்டு (2) கி.மு 6ம் நூற்றாண்டு (3) கி.மு 7ம் நூற்றாண்டு
(4) கி.மு 5ம் நூற்றாண்டு (5) கி.மு 2ம் நூற்றாண்டு

8. உள்ளதை உள்ளபடி கூறும் நாடக வடிவம்
(1) மிகைப்பாட்டு நாடகம்
(2) யதார்த்த நாடகம்
(3) யதார்த்தவிரோதநாடகம்
(4) குறியீட்டு நாடகம்
(5) செந்நெறிப்படுத்தப்பட்ட நாடகம்

9. நாடகம் ஒன்றினை முழுமையாக பழக்கி அரங்கேற்றம் செய்பவர்
(1) நாடக தயாரிப்பாளர் (2) நெறியாளர் (3) மேடைமுகாமையாளர்
(4) ஒளி அமைப்பாளர் (5) இசை அமைப்பாளர்

agaram.lk

10. உலக நாடக வரலாற்றில் முதலாவது நடிகனாக விளங்குபவர்
(1) தெஸ்பிஸ் (2) யூரிப்பிடிஸ் (3) சோபோகிளிஸ்
(4) அரிஸ்ரோட்டில் (5) தெரன்ஸ்

11. ஆடை ஆபரணங்கள் மூலம் நடிப்பில் வெளிப்படுத்தும் சித்திரிப்பு
(1) உடல் வழிச் சித்திரப்பு (2) பாடல் வழிச்சித்திரிப்பு (3) குரல்வழிச் சித்திரிப்பு
(4) காண்மிய வழிச்சித்திரிப்பு (5) உணர்வு வழிச்சித்திரிப்பு

12. துன்பம் நிறைந்த காட்சிகளை எடுத்துக் கூறும் நாடகம்
(1) மகிழ்நெறிநாடகம் (2) அவலச்சுவை நாடகம் (3) சற்றையர் நாடகம்
(4) வீர நாடகம் (5) விகட நாடகம்

13. ஊமம் எனப்படுவது
(1) மொழியை பயன்படுத்துவது
(2) மொழியையும் உடலையும் பயன்படுத்துவது
(3) உடலை மட்டும் பயன்படுத்துவது
(4) பாடலுடன் உடலை பயன் படுத்துவது
(5) ஆடலும் பாடலும் இணைந்த வடிவம்

14. நாடகம் முழுமை பெறுவது.
(1) நெறியாளரின் முன்னிலையில் (2) தயாரிப்பாளன் முன்னிலையில்
(3) ஒப்பனையாளன் முன்னிலையில் (4) பார்வையாளன் முன்னிலையில்
(5) நடிகரின் முன்னிலையில்

15. பின்வருவனவற்றில் தூய நடத்தைகுறிப்பது
(1) நிருத்த (2) பரதம் (3) நாட்டிய
(4) நிருத்திய (5) பாவபதம்

16. அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் அரங்க மும்மைகள்
(1) காலம்,இடம், செயல்
(2) காலம், வெளி, நடிப்பு
(3) நடிப்பு,காட்சி,இசை
(4) பாத்திரம்,காலம், இயக்கம்
(5) ஒளி,அசைவு, வெளி

agaram.lk

17. அன்ரிக்கனி நாடகத்தின் ஆசிரியர்
(1) ஈஸ்கலஸ் (2) சோபோகிளிஸ் (3) அரிஸ்ரோபன்ஸ்
(4) மெனாண்டர் (5) யூப்பிடிஸ்

18. அரிஸ்ரோட்டில் எந்த நாட்டை சேர்ந்தவர்
(1) இந்தியா (2) இத்தாலி (3) சீனா (4) கிரேக்கம் (5) மத்திய காலம்

19. நாடகம் ஒன்றிற்கு மிகவும் அத்தியவசியமான அபிநயம்
(1) வாச்சீகம் (2) ஆங்கீகம் (3) சாத்வீகம் (4) ஆஹார்யம் (5) அபிநயகம்

20. அபிநயம் என்னும் எண்ணக்கரு எந்த நாடக மரபிற்கு உரியது.
(1) யப்பன் (2) சீனா (3) இந்தியா
(4) இத்தாலி (5) கிரேக்கம்

21. படச்சட்ட மேடையின் தாயகம்
(1) உரோம் (2) கிரேக்கம் (3) இத்தாலி (4) இந்தியா (5) இங்கிலாந்து

22. ஆசிரியர் விரும்புவதை பார்வையாளரிற்கு முழுமையாக வழங்கும் நபர்.
(1) தயாரிப்பாளன் (2) நெறியாளன் (3) நடிகன்
(4) ஒளிமைப்பாளர் (5) மேடைமுகாமையாளர்

23. ஹமாசியா எனப்படுவது.
(1) பயம் (2) கழிவிரக்கம் (3) கதாசிஸ்
(4) நல்லதொன்றின் நலிவு (5) அவலத்தவறு

24. ஒரு நாடகத்தின் முழுமையான அறிக்கையைப் புலப்படுவது.
(1) இசை (2) ஒளி (3) ஒப்பனை (4) கரு (5) ஒலி

25. கிரேக்க அரங்கில் நாடகத்துடன் தொடர்புடைய தெய்வம்.
(1) தியோசஸ் (2) அப்பலோ (3) கொறிகஸ் (4) டயோனிசஸ் (5) புருட்டஸ்

26. நாடகத்தில் மனநிலை சிருஸ்டிக்க அதிகளவில் உதவுவன
(1) ஒளி,மேடைப்பொருள் (2) இசை, கைப்பொருள் (3) ஒளி, இசை
(4) ஒப்பனை, ஒலி (5) கைப்பொருள் ,காட்சியமைப்பு

27. கருத்துான்றல் , அவதான பயிற்சிகளிற்கு அழுத்தம்கொடுக்கும் அரங்க விளையாட்டு.
(1) ஆடும்வீடும் (2) கோழி கோட்டான் (3) பழக்கலவை
(4) கரடியும் கிராம மக்களும் (5) நண்டு, இறால், மீன்

28. பின்வருவனவற்றுள் நரம்பு வாத்திய கூட்டம் எது?
(1) வீணை,வயலின், தம்புரா
(2) வீணை, வயலின், சுத்தமத்தளம்
(3) வயலின், உடுக்கு, தம்புரா
(4) தம்புரா, சுத்தமத்தளம், முகர்சிங்
(5) வயலின், புல்லாங்குழால், தம்புரா

29. நாடக எழுத்துருவினை வியாக்கியானம் செய்யும் கலைஞன்.
(1) நடிகன் (2) காட்சி விதானிப்பாளன் (3) நெறியாளன்
(4) தயாரிப்பாளன் (5) நாடக ஆசிரியர்

agaram.lk

30. தியேட்டர் என்டபது அடிப்படையில்
(1) மகிழ்விக்கும் இடம் (2) பார்க்கும் இடம் (3) உரையபடும் இடம்
(4) கூடும் இடம் (5) விளையாடும் இடம்

31. நாடக எழுத்துருவில் வருகின்ற நாடக சம்பவங்களின் தொடர்ச்சியை பின்வருமாறு அழைப்பர்.
(1) கட்டமைப்பு (2) நிகழ்ச்சி நிரல் (3) கதைக்கரு
(4) காட்சிகள் (5) கதைப்பின்னல்

32. ஆற்றுகை கலையாக ஏற்க முடியாதது.
(1) பலே (2) ஒப்பேறா (3) கூத்து (4) ஓவியம் (5) இசை

33. நாடகம் ஒரு
(1) ஆடற்கலை (2) பாடற்கலை (3) ஆக்கும் கலை
(4) தனிக்கலை (5) கூட்டுக்கலை

34. வானொலி நாடக நடிகன் ஒருவனுக்கு அவசியமற்றது.
(1) நடிப்புத்திறன்
(2) உணர்ச்சி வெளிப்பாட்டு திறன்
(3) குரல் வெளிப்பாட்டுதிறன்
(4) பௌதீக தோற்றப் பொலிவு
(5) பாத்திரம் தாங்கும் திறன்

35. கட்புல மூலகங்களிற்கு பொருத்தமன தொகுதி.

(1) இசை, வாய்ப்பாடு, திரை
(2) காட்சி விதானிப்பு, நடிகன், ஒளி
(3) நாடகபாடம், வசனம், உரையாடல்
(4) ஒலி, ஒளி, காட்சி விதானிப்பு
(5) திரை, நாடகப்பாடல், நடிகன்

36. நாடகம் ஒன்றின் ஒத்திகைச் செயற்பாட்டின் ஆற்றுகைக்கு முன்னரான இறுதி ஒத்திகை.

(1) மெருகூட்டல் ஒத்திகை
(2) தொழில்நுட்ப ஒத்திகை
(3) மனன ஒத்திகை
(4) வெள்ளுடுப்பு ஒத்திகை

37. நெறியாள்கையை இலகு படுத்துவதற்காக படச்சட்ட மேடை பிரதானமாக பிரிக்கப்படும் எண்ணிக்கை.

(1) 8 (2) 6 (3) 5 (4) 9 (5) 12

38. பார்ப்போரின் பதிற்குறி தாக்கம் செலுத்தும் கலைகளில் ஒன்று.

(1) ஓவியம் (2) கட்டிடம் (3) நாடகம் (4) சிற்பம் (5) இலக்கியம்

39. நெறியாளன் தயாரிப்பாளன் முன்னிலையில் நடிகர்களை தனித்தனியாக அழைத்து தெரிவு செய்யும் பாத்திர தெரிவு முறை.

(1) திறந்த தெரிவு
(2) மூடியதெரிவு
(3) சல்லடைத் தெரிவு
(4) புதிதளித்த மூலமான தெரிவு
(5) பிரத்தியேக தெரிவு

40. யாழ்ப்பாணத்தில் ஆரம்ப காலத்தில் இசை நாடகம் ஆடப்பட்ட கொட்டகைகளில் ஒன்று

(1) துரையப்பா அரங்கு
(2) கைலாசபதி கலையரங்கு
(3) துர்க்கா மணி மண்டபம்
(4) புத்துவாட்டியார் மடுவம்
(5) திருமறைக் கலா மன்றம்

agaram.lk

## பகுதி II

1.

i. ஆற்றுகைக்கலை என்றால் என்ன?

ii. ஆற்றுகைக்கலையின் பண்புகளை விளக்குக.

iii. ஏனைய ஆற்றுகைகலைகளில் இருந்து நாடகம் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக.

2.

i. திறஜெடி நாடக எண்ணக்கரு தொடர்பாக அரிஸ்ரோட்டில் எழுதிய நூல் யாது?

ii. அரிஸ்ரோட்டில் கூறும் அவலச்சுவையின் ஆறு பண்புகள் எவை?

iii. அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

iv. கதாசிஸ் எனப்படும் உணர்ச்சி வெளிக் கொணர்கை பற்றி விளக்குக.

3.

i. ஈடிப்பஸ் நாடக ஆசிரியரின் பெயர் என்ன?

ii. ஈடிப்பஸ் நாடகத்தில் புலப்படும் பிரதான கரு யாது?

iii. ஈடிப்பஸ் நாடகத்தில் வரும் பாத்திரம் 05 தருக.

iv. ஈடிப்பஸ் பாத்திர பண்புகள்?

4.

1. அபிநயம் என்பதன் பொருளை விளக்குக?
2. அபிநயம் நான்கையும் குறிப்பிட்டு அவைபற்றிக் கூறுக?
3. அவை நாடகத்திற்குப் பயன்படும் முறையை விளக்குக?

5. பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. அரங்க விளையாட்டு
2. நாடகமும் சினிமாகவும்
3. தொலைக்காட்சி நாடகம்
4. யதார்த்தப் பாணி
5. கதாசிஸ்

6. உமது பாடசாலையில் நடைபெற்ற நாடகம் ஒன்றில் நீர் பங்கு கொண்டதால் ஏற்பட்ட நாடக அனுபவங்களை நடிப்பு, உடை, ஒப்பனை பற்றி விளக்குக

agaram.lk